කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

පොහොර නිෂ්පාදන හා සැපයුම්, රසායනික පොහොර හා කෘමිනාශක භාවිත නියාමන රාජ්‍ය අමාත්‍යාංශය
உரஉற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு
State Ministry of Production and Supply of Fertilizer and Regulation of Chemical Fertilizer and Insecticide Use

නො. 80/5,ගොවිජන මන්දිරය, රජමල්වත්ත පටුමග, බත්තරමුල්ල
இல.80/5, கொவி ஜன மந்திரய, ரஜமல்வத்த ஒழுங்கை, பத்தரமுல்லை
No. 80/5, Govijana Mandiraya, Rajamalwatta Avenue, Battaramulla

**Translated Copy**

මගේ අංකය. / எனது இல. / My No. 7/1/3/2020-21 பெரும்போகம்/சுற்றறிக்கை
ඔබේ අංකය. / உமது இல. / Your No.
දිනය. / திகதி. / Date. 2020.09.14

கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்,
மாவட்டத்திற்கு பொறுப்புடைய சகல கமநல அபிவிருத்தி
பிரதி ஆணையாளர்கள் / உதவி ஆணையாளர்கள்,
சகல கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தர்கள்,

மகாவலி பணிப்பாளர் நாயகம்,
நீர்ப்பாசன முகாமைத்துவ பிரிவு பணிப்பாளர்,

விவசாய பணிப்பாளர் நாயகம்,
மாகாண விவசாய பணிப்பாளர்கள்,

தலைவர், இலங்கை உரக் கூட்டுத் தாபனம்,
தலைவர், கொழும்பு வர்த்தக உரக் கூட்டுத் தாபனம்,

**<u>2020/21 பெரும்போகப் பயிர்ச் செய்கைக்கு உரங்களை இலவசமாக பகிர்ந்தளித்தல்</u>**

நெல் விவசாயிகளுக்கு இலவசமாக உரங்களை விநியோகிப்பது தொடர்பான நிகழ்ச்சித் திட்டத்தை 2020/21 பெரும்போகத்திலும் செயற்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், நெற் பயிருக்கு யூரியா, ட்ரிப்ல் சுப்பர் பொசுபேற்று (ரீ.எஸ்.பி.), மியுரேட்டு பொட்டாசியம் (எம்.ஓ.பி.) முதலிய உர வகைகளை, நெல் விவசாயிகளுக்கு உரிய சிபாரிசுகளுக்கு ஏற்ப இலவசமாக பெற்றுக் கொடுப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

2020/21 பெரும்போகத்தில் நெல் பயிருக்கு இலவசமாக உரங்களை பகிர்ந்தளிக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களையும் மற்றும் அறிவுரைகளையும் உள்ளடக்கிய வழிகாட்டல்கள் அடங்கும் ***இலவசமாக உரங்களை பகிர்ந்தளித்தல் பற்றிய 6/2020*** ஆம் இலக்க சுற்றறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ள முறைகள், அறிவுரைகள் மற்றும் நிபந்தனைகள் என்பவற்றை சரியான முறையில் புரிந்துகொண்டு செயல்படுமாறும், 2020/21 பெரும்போக பயிர்ச் செய்கை ஆரம்பமாவதற்கு முன்னர் தேவையான விழிப்புணர்வை ஏற்படுத்தி உரிய அறிவுரைகளை சம்பந்தப்படுகின்ற சகல உத்தியோகத்தர்களுக்கும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் தயவுடன் அறியத் தருகின்றேன்.

உரங்களை பெற்றுக் கொள்ளும் மற்றும் உரங்களை பகிர்ந்தளிக்கும் போது ஏற்படக் கூடிய தாமதங்களையும் மற்றும் இடையூறுகளையும் தவிர்த்துக் கொள்ளும் நிமித்தமும் மற்றும் கமநல சேவை நிலையங்களினது களஞ்சியசாலைகளில் தேவையான உரங்கள் இலவசமாக பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் நிமித்தமும் உரங்கள் பகிர்ந்தளிப்பு தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தும் விடயத்துடன் தொடர்புடைய சகல தரப்புகளும் சரியான புரிந்துணர்வுடனும் மற்றும் ஒருங்கிணைப்புடனும் செயற்படக் கூடிய வகையில் நடவடிக்கை எடுப்பது மிகவும் அவசியமாகும்.

ලේකම් / செயலாளர் / Secretary — දුරකථන / தொலைபேசி / Telephone - 011-2879048; ඊ-මේල් / மின்னஞ்சல் / e- mail - secretary@agrimin.gov.lk; ෆැක්ස් / தொலைநகல் / Fax - 011-2863497
කාර්යාලය / அலுவலகம் / Office — දුරකථන / தொலைபேசி / Telephone - 011-2872093, 011-2872097; ඊ-මේල් / மின்னஞ்சல் / e- mail - info@agrimin.gov.lk; ෆැක්ස් / தொலைநகல் / Fax - 011-2868910